# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 47/2022 நாள்: 16.02.2022

### நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் - 2022

**நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை அமைதியான முறையில் நடத்துதல், கோவிட்-19 வழிகாட்டு நடைமுறைகளை கடைபிடிப்பதை உறுதி செய்தல், வாக்குச்சாவடிகள், பாதுகாப்பு அறை மற்றும் வாக்கு எண்ணுகை மையங்களில் சிசிடிவி பொருத்துதல் மற்றும் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளின் தயார் நிலை குறித்த ஆய்வுக்கூட்டம் இன்று (16.02.2022) பிற்பகல் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது.**

தமிழ்நாட்டில் 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 489 பேரூராட்சிகளுக்கான நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல்களுக்கான வாக்குப்பதிவு 19.02.2022 அன்று ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் ஆயத்தப் பணிகள் மற்றும் தேர்தலை நேர்மையான முறையில் நடத்துவது குறித்த கலந்தாய்வுக் கூட்டம் காணொலிக் காட்சி (Video conferencing) வாயிலாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ.பழனிகுமார், இ.ஆ.ப.,(ஓ) அவர்கள் தலைமையிலும், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திருமதி. எ. சுந்தரவல்லி இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையிலும், அனைத்து தேர்தல் பார்வையாளர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் இன்று (16.02.2022) நடைபெற்றது.

இக்காணொலி ஆய்வுக்கூட்டத்தில், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை அமைதியாக நடத்துவதற்கு கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வார்டு வாரியாக வேட்பாளர்கள் விவரங்கள் பதிவு செய்தல், பெல் (BEL) நிறுவன பொறியாளர்களை நியமனம் செய்தல் குறித்தும்

வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு அஞ்சல் வாக்குகள் வழங்கியது, வாக்காளர்களுக்கு வாக்குச்சாவடிச்சீட்டு **(Booth Slip)** வழங்கப்பட்ட விவரம், மண்டல அலுவலர்கள் மூலம் வாக்குச்சாவடியில் சாய்தளம் மற்றும் சக்கர நாற்காலி ஏற்பாடு செய்யப்பட்டதை உறுதி செய்தல், பிரதான மற்றும் துணை வாக்காளர் பட்டியல் விடுதலின்றி தயார் செய்தல், கோவிட்-19 பாதுகாப்பு பொருட்கள் வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பப்படும் விவரம், வாக்குச்சாவடிகள், பாதுகாப்பு அறை மற்றும் வாக்கு எண்ணுகை மையங்களில் CCTV பொருத்தப்பட்டது, கோவிட்-19 வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடிப்பதை உறுதி செய்ய 2 அலுவலர்கள் நியமனம் ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும், வட்டார பார்வையாளர்கள் தேர்தலுக்கு முந்தைய நாள் மற்றும் தேர்தல் நாளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், தேர்தல் முடிந்தவுடன் தேர்தல் பொருட்களை மண்டல அலுவலர்களிடமிருந்து பெற்று, பாதுகாப்பு அறையில் வைத்திட வரவேற்பறையில் செய்த ஏற்பாடுகள் விவரம் குறித்தும் தேர்தல் பார்வையாளர்களிடம் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர். இரா. செல்வராஜ், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு பா.பொன்னையா, இ.ஆ.ப., கூடுதல் காவல்துறை இயக்குநர் (தலைமையிடம்) திரு. ஜி. வெங்கட்ராமன், இ.கா.ப., காவல் உதவி தலைவர் (தலைமையிடம்) முனைவர் எம். துரை, இ.கா.ப., முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி. கு. தனலட்சுமி, முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு. கி. அ. சுப்பிரமணியம், உதவி ஆணையர், (தேர்தல்) திரு. அகஸ்ரீ சம்பத்குமார் மற்றும் ஆணைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

16/2/2022

மக்கள் தொடர்பு அலுவலர்